மக்களின் ஏடு

Registered as a Newspaper

Time Reader
11/40 AM.
10/25 AM.
Staff Date-Time


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை (06-10-1995) UTHAYAN A lively National Tamil Daily கதிர் 316


# வடக்கில் யுத்தத்தை நிறுத்தக்கோரி
# கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

## கோட்டை ரயில்நிலையம் முன்பாக வாசுதேவ தலைமையில் நடந்தது

கொழும்பு, ஒக்ரோபர் 6

வடக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரியும்—

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை விரைவில் சட்டமாக்கும்படி வேண்டியும்—

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

ஜனநாயக பொதுமக்கள் முன்னணி மற்றும் மார்க்ஸிய தொழிலாளர் கூட்டு ஆகிய அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் அமைப்பாளராக அரசுத் தரப்பு எம்.பியான வாசுதேவ நாணயக்கார செயற்பட்டார். அவருடன் மற்றொரு அரச எம்.பியான வை.பி.டி. சில்வா மற்றும் வண. பத்தேகம சுமித்த தேரர் உட்பட பெரும் எண்ணிக்கையான பிரமுகர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

யுத்தத்தை நிறுத்தக்கோரி — பிக்குமார் கலந்து கொள்ளும் — மற்றொரு ஆர்ப்பாட்டமும் விரைவில் ஒழுங்கு செய்யப்படும் என சுமித்த தேரர் கூறினார்.

''யுத்தத்தை நிறுத்தக் கோரி நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினால் மட்டும் போதாது மக்களோடு சேர்ந்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துவதும் அவசிய

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்தவின் வாகனம் முன் பாய்ந்த இளைஞர்!

### கைதாகி விசாரணை!!

கொழும்பு, ஒக். 6

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மோட்டார் வாகன அணி வந்துகொண்டிருந்த சமயம் அனுருத்த ரத்வத்த பயணம் செய்த வாகனம் முன் பாய எத்தனித்ததாக இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரு இளைஞர்களையும் பிரதி பாதுகாப்பு அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்கள் கைது செய்து கறுவாக்காட்டு பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் கொழும்பு புல்லஸ் லேனில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தாங்கள் இருவரும் கம்பளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் —

புல்லஸ் லேன் ஊடாகச் செல்லும் 154 இலக்க பஸ் வரும்வரை காத்திருந்ததாகவும் —

மோட்டார் வாகன அணி வந்தபோது பஸ்ஸே வருகின்றது என எண்ணி முன்னுக்குப் பாய்ந்ததாகவும் பொலீஸ் விசாரணையின்போது இவ்விரு இளைஞர்களும் தெரிவித்துள்ளனராம். [இ-4-6]

# படையினரிடம் சிக்கியோரில் பலர்
# ஆலயங்களிலே தடுத்து வைப்பு

### வீதிகளில் சடலங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 9

வலிகாமம் கிழக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டவர்கள் அப்பகுதியில் உள்ள சில ஆலயங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வலி கிழக்கு அச்சுவேலி வடக்கில் உலவிக்குளம் பிள்ளையார் கோவிலில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல வேறும் சில ஆலயங்களிலும் பலர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்ற பகுதிகளில் வீதி ஓரங்களில் சில பொதுமக்களின் சடலங்கள் கிடப்பதாகவும் —

இதேபோன்று கால்நடைகளின் சடலங்களும் அழுகிய நிலையில் ஆங்காங்கே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையின்போது ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி ஓடியவர்களே வீதிகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட பொதுமக்களின் சடலங்கள் உரியமுறையில் அகற்றப்படாமல் அழுகிச் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதாக கூறப்படுகின்றது. [இ-15-11]

## 3 மீனவர்கள் படையினரிடம் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 6

வலிகாமம் மேற்கு கடற்பரப்பில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த 3 மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று பிடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் புளியந்துறை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். சுகவீனம்

கொழும்பு, ஒக். 6

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இருதய நோய் காரணமாக நேற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 89 வயதான ஜெயவர்த்தனாவின் உடல் நலம் முன்னேறி வருவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். (இ-4)

# ஓர் அதிகாரி உட்பட 52 படையினர் பலி

### அரசு உத்தியோகபூர்வ அறிவிப்பு

பலாலி இராணுவ முகாமிலிருந்து வலி.கிழக்கு பகுதி நோக்கிய நான்கு நாள் ''இடிமுழக்க தாக்குதல்'' இராணுவ நடவடிக்கையின்போது ஓர் அதிகாரி உட்பட 52 படையினர் கொல்லப்பட்டனர். 9 அதிகாரிகளும் 114 படையினரும் காயமடைந்தனர்.

இத்தகவல்களை நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்தார். (இ-4)

# இலங்கை அரசு போரை உடன் நிறுத்தவேண்டும்

### கோபாலசாமி அறிக்கை

சென்னை, ஒக். 6

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாணும் சூழ்நிலையை ஏற்படுத்த இலங்கை அரசு தற்போது மேற்கொண்டிருக்கும் இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவருக்கு அறிவு விளக்கேற்றி மண்ணின் மைந்தர்களாக்குக

### ஆசிரியருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 6

எங்கள் மாணவருக்கு மங்கா அறிவு விளக்கேற்றி அவர்களை எங்கள் மண்ணின் மைந்தர்களாக ஆக்குவதற்கு ஆசிரியர்கள் அனைவரும் ஒருமித்தும் தனித்தும் உழைக்க வேண்டும். — என்று தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை ஆசிரியர் நாளையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [illegible] விபரம் வருமாறு:

ஆசிரியத் தொழில் ஓர் உயர் தொழிலாகும். பொருளீட்டும் நோக்கத்தோடு சிலமணி நேரம் ஏதோ விருப்பமற்ற செயலைச் செய்வது போன்றதன்று இத்தொழில். இளம் உள்ளங்களோடு அன்பு கொண்டு உறவாடி அவர்களது நல்வளர்ச்சிக்கும் சமுதாயத்தின் நல்வாழ்விற்கும் உதவுவதில் தோன்றக்கூடிய மனநிறைவும் அமைதியும், மகிழ்ச்சியும் ஆசிரியத்தொழிலில்தான் உண்டு.

இத்தொழில் ஒரு படைப்புத் தொழிலாகும். எனவே ஆசிரியர் சமூகத்தின் மிகச் சிறந்த உறுப்பினராவார். அந்த சமயத்தில் சமூகத்தின் சீரிய தொண்டருமாவார்.

எமது மண்ணில் நிலைத்து நின்று, எத்தனையோ தடைகளுக்கும் துயர்களுக்கும் முகங்கொடுத்து பணியாற்றும் ஆசிரியர்கள் பாராட்டிற்குரியவராவர். எதிர்கால

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வணிக ஊழியர் கழகத்தின் உதவிக்கு நன்றி

புக்காரா விமானக் குண்டு வீச்சுக்கு நானும் எனது சிரேஷ்ட புதல்வனும் இலக்காகி படுகாயமடைந்த வேளையில் எமக்கு பல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கியதோடு, எமது குடும்பத்துக்கு மூன்று வார காலத்துக்கு தேவையான உலர் உணவுப் பொருள்களும், வைத்திய செலவுக்கு 4055 ரூபாவும் அன்பளிப்பாக தந்து உதவிய யாழ் வணிக ஊழியர் கழகத்துக்கு நானும் எனது குடும்பமும் நன்றி உடையவராக இருப்போம்.

**வளர்க கழகத்தின் பணி**

க. பத்மநாதன்
ஊழியர்
யாழ்ப்பாண விற்பனவு நிலையம்,
மருத்துவமனை வீதி,
(கிட்டுச்சாலை)
யாழ்ப்பாண .

(சி/2422)



## ஆசிரியர் தினம் 1995-10-06

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்களை

★ வாழ்த்துகிறோம் ★

மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,

(38876)


# வெளிநாட்டவரான பென் பவிங் உட்பட பலர் புத்தூரில் படையினர் பிடிக்குள்

## மெதடிஸ்த முகாமைக்குரு ஜனாதிபதிக்கு தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 6

படையினரால் வலிகாமம் கிழக்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப்பட்ட "இடிமுழக்கத் தாக்குதல்" நடவடிக்கையின் போது புத்தூரில் சிக்கியவர்களில் ஹொலந்து நாட்டவரான பென்பவிங் என்பவரும் அடங்குவார்.

புத்தூர் மெதடிஸ்த ஆலயம், மிஷன் வைத்தியசாலை ஆகியவை அமைந்துள்ள பகுதி படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த சமயம் பென் பவிங்கும் மெதடிஸ்த திருச்சபை ஊழியர் செல்வி ஜேன் இரத்தினம், மற்றும் மிஷன் வைத்தியசாலை ஊழியர்கள், தாதிகள், முதியோர் இல்லத்தைச் சேர்ந்த வயோதிபர்களும் படையினரிடம் சிக்கிக் கொண்டனர்.

பென்பவிங் முதியோர் இல்லத்துக்குப் பொறுப்பாக அங்கு கடமை ஆற்றிக் கொண்டிருந்தார்.

புத்தூர் மிஷன் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் ராஜேந்திராவும் படையினர் பிடியில் சிக்கி இருந்த போதிலும் நேற்று மாலை ஒருவாறாக தமது சொந்த இடமான கோப்பாய் வந்து சேர்ந்தார்.

புத்தூரில் சிக்கி உள்ள இவர்கள் குறித்து மெதடிஸ்த திருச்சபை வடக்கு - கிழக்கு மறை மாவட்டத் தலைவர் அருட் திரு. எஸ். எஸ். கருணைராஜ் நேற்று மாலை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மூலம் ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பி இருந்தார். [இ]

# மினிபஸ் சாரதியும் படையினர் பிடியில்

## தேடிச் சென்றவர் பலி

வடமராட்சி, ஒக். 6

புத்தூர் பகுதியில் உள்ள வீடொன்றில் பொருள்களை எடுக்க மினி பஸ்ஸுடன் சென்ற சாரதியான தம்பசிட்டியைச் சேர்ந்த பரதன் என்பவரை படையினர் கைது செய்துள்ளனர்.

இதன் பின்னர் இதே மினி பஸ்ஸை மீட்கச் சென்ற பருத்தித்துறை செட்டித்தெருவைச் சேர்ந்த மற்றொரு சாரதியான இ. சிறிகரன் (23 வயது) என்பவர் படையினரின் சூட்டுக்கு இலக்கானார்.

படுகாயத்துடன் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர் மரணமானார். (இ-173)

அரசாங்க அதிகாரியின் வாதம் இது:

# தேவைக்கு மேலதிகமான உணவு வடபகுதிக்கு அனுப்பப்படுகிறதாம்!

கொழும்பு, ஒக். 6

வட பகுதிக்குத் தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதாகவும், அங்கு உணவுத்தட்டுப்பாடோ, பட்டினி நிலையோ ஏற்படவில்லை என்றும்—

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எம். என். ஜுனைத் வாதாடுகிறார்!

வடக்கு-கிழக்கில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், அங்கு பட்டினி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வெளிவந்த செய்திகளை மறுத்தே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவரது மறுப்புக்கு இலங்கை வானொலி பெரும் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பியது.

இவ்விதம் பட்டினி நிலையோ, உணவுத் தட்டுப்பாடோ ஏற்பட்டிருந்தால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, எம். எஸ். எவ், சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற அமைப்புகள் சர்வதேச தொடர்பு சாதனங்களில் அது பற்றி பெரிதாக செய்திகளை வெளியிட்டிருக்கும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை என்றும் ஜுனைத் சுட்டிக்காட்டினாராம்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரை வடக்கிற்கு 78 கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை அரசாங்கம் கப்பல்கள் மூலம் அனுப்பி வைத்துள்ளது. —

இந்தத் தொகையில் 60 சதவீதமானவை இலவசமாக வழங்கப்பட்டன. —

மிகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், ஏனைய தனியார் வர்த்தகர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. —

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை மீறப்பட்ட போது 20 ஆயிரம் தொன் உணவுப் பொருள்கள் இருப்பில் இருந்தால் வடக்கில் உணவுப்பற்றாக்குறை ஏற்படவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் [illegible] மாதத்திற்கு 6 முதல் 7 ஆயிரம் தொன் வரையிலாகும் —

## தட்டுப்பாடு எதுவும் இல்லையாம்

எனினும் அரசு மாதம் ஒன்றுக்கு சராசரியாக 8 ஆயிரத்து ஐநூறு தொன் உணவுப் பொருள்களை அனுப்புவதால் கடந்த ஜூன் மாதத்திலே மேலதிக இருப்பை அவர்கள் சேர்த்து வைக்கக் கூடியதாக இருந்தது. — என்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார். (அ-எ)

# பாடசாலைகளில் இன்று ஆசிரியர் தின நிகழ்வுகள்

உலக ஆசிரியர் தினம் இன்றாகும். அதனை ஒட்டி யாழ். மாவட்ட பாடசாலைகளில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளில் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் இன்று நடைபெறும் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மலர் மாலைகளை அணிவித்து அவர்களைப் பாராட்டி வாழ்த்துரைப்பர்.

இன்றுள்ள நிலையில் பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் கல்விப்பணியை தலைமேற்கொண்டு செயலாற்றும் எம் மண்ணின் ஆசிரியர்களின் சிறப்பைப் பாராட்டுவது நமது கடமையாகும் என்று தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை அறிவித்துள்ளது. (ஐ)

# தென்மராட்சியை நோக்கி செல்லும் கால்நடைகள்!

வலி கிழக்குப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள "இடி முழக்கத்" தாக்குதலினால் மக்கள் மட்டுமல்ல கால்நடைகளும் பெரும் எண்ணிக்கையில் தென்மராட்சிப் பகுதியை நோக்கிப் படையெடுத்துச் செல்கின்றன.

ஷெல் மற்றும் வேட்டுச் சத்தங்களுக்கு அஞ்சி ஆடு, மாடுகளும் கூட்டம் கூட்டமாக மறவன்புலோ, தனங்கிளப்பு, மட்டுவில், சரசாலை போன்ற வயல் பிரதேசங்களுக்குச் செல்வதைக் காணமுடிகிறது. (எ-மி)


## ஆசிரியர்களுக்கு வாழ்த்து

சீரிய சமுதாயத்தின் சிற்பிகள் நல்லாசிரியர்களே!
எழுத்தறிவித்த ஆசான்களை
இறைவனாகக் கணித்து மதித்துப் போற்றுவோம்
தலைமைத்துவத்தை வளர்த்து மாணவர்களை
தேச சேவைக்கு ஆற்றுப்படுத்தும் ஆசிரிய மணிகளை

அனைத்துலக ஆசிரியர் நாளாகிய
இன்று
பாராட்டி வாழ்த்துகிறோம்

சிவகணேசன் பட்டுச் சோலை
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ராம் [illegible]
109, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

(சி-2420)



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

ஆசிரியர் தின நிகழ்வை ஒட்டி இன்று பாடசாலையில் நடைபெறவிருந்த மதிய போசன விருந்து தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும் ஆசிரியர்களை கௌரவிக்கும் ஏனைய நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி இன்று பாடசாலையில் நடைபெறும்

செயலாளர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

(சி-2423)



## சபிண்டீகரண அழைப்பு

**அமரர் சிதம்பரப்பிள்ளை ஐயர் கனகசபாபதி ஐயர்**

[மண்டுவில் இலஞ்சியாரணியம் அம்மன் ஆலயம்]

21-09-1995 அன்று சிவபதமடைந்த அன்னாரது பாஷாண உத்வாசனம், மற்றும் ஆத்ம சாந்திக் கிரியைகளும் மகேஸ்வர பூசையும் நிகழும் யுவஹு புரட்டாதி மாதம் 20 ஆம் நாள் (06-10-95) இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

"அம்பிகை வாசா",
மீசாலை மேற்கு.

[38881]



## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்க
(இல. 750) அங்கத்தவரான
செட்டித்தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த

**இரத்தினசிங்கம் சிறிகரன்**

நேற்று பிற்பகல் அகால மரணமான செய்தியறிந்து அதிர்ச்சியுற்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கி, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

சிற்றூர்திச் சேவைச்சங்கம்
[இல.750]
வடமராட்சி

(38883)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் தற்போது ஈட்டும் வெற்றிகள் மூழ்கும் கப்பலின் மாலுமிகள் நிலையினதே!

*விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் புரட்டாதி மாத இதழில் வெளியான பிரதான தலைப்புச் செய்தியின் கட்டுரை வடிவிலான மறு பிரசுரம் இது.*

## ஒவ்வொரு ஆக்கிரமிப்பு முயற்சிக்கும் தகுந்த பதிலடி கொடுக்க புலிகள் தயார்

குடாநாட்டுக்குள் நடந்தேறியுள்ள பாரிய படைக்குவிப்பால், தமது முகாம்களின் எல்லைகளை விஸ்தரிப்பதில், சில அனுகூலங்களைச் சிங்களப் படைகள் பெற்றுள்ளனதான்; ஆயினும், ஒட்டு மொத்தமான யாழ்ப்பாணப் படையெடுப்பு என்பது, சிங்களப் படைகளுக்கு சாத்தியமான ஒன்றாக இருக்கப் போவதில்லை.

எதிரிப் படைகள் நடத்தும் ஒவ்வொரு ஆக்கிரமிப்பு முயற்சிக்கும் தகுந்த பதிலடி கொடுப்பது என்பதில், புலிகள் இயக்கம் உறுதியாகவே உள்ளது. கடந்த ஞாயிறன்று [01-10-95] சிங்களப் படைகள் நடத்திய 'இடிமுழக்கத் தாக்குதல்' நடவடிக்கைக்குப் பதிலடியாக, 03-10-95 அதிகாலை புலிகள் தொடுத்த தாக்குதலும் அதில் ஒரு அங்கமாகும்.

இந்தப் பெருந்தாக்குதலில் 150 போராளிகள் வீரச்சாவடைந்தனர். சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்தளவில், இந்த உயிரிழப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நவக்கிரி என்று பரந்த பரப்பில் நடந்த சமர் என்பதாலும் -

மற்றும் புதிதாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி என்பதால் அந்தப் பகுதிமீது புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பில்-சிங்களப் படைத்துறையின் முழுக் கவனமும் அந்த நிலப்பரப்பின் மீதே குவிக்கப்பட்டிருந்தாலும்—பொருதுகளம் கடுமையானதாக மாறியிருந்தது சண்டைக்களம் கடுமையானதாக இருக்கும் என்பதற்காக, எதிரியின் பெரியதொரு ஆக்கிரமிப்பு முயற்சிக்குப் பதிலடி கொடுக்காமலும் இருக்கமுடியாது ஏனெனில், அது உயிரிழப்புகள் தரும் பிரிவுத் துயரை விட, வேறுபல இராணுவப் பின்னடைவுகளை தமிழினத்தின் மீது திணித்துவிடலாம் எனவே பதில் தாக்குதலும். அதனால் எழக்கூடிய உயிரிழப்புகளும் தவிர்க்க முடியாதவையாகின்றன.

ஆயினும், இந்தப் பதில் தாக்குதலின்மூலம், புலிகள் இயக்கம் தான் நினைத்ததைச் சாதிக்க முடியாது போய் விட்டது என்பதும் உண்மையாகும் எனினும், சிங்களப் படைத்தரப்பில் நிகழ்ந்த உயிரிழப்புகள் அரசால் குறைத்து வெளியிடப்பட்டுள்ளன என்ற உண்மை நிலையையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இதேவேளை, குடாநாட்டுக்குள் எதிரிவைத்திருக்கும் ஆசுர பலத்திலும் ஒரு இராட்சத பலவீனம் இருக்கின்றது அதாவது குடாநாட்டுப் படைகளுக்கு இருக்கின்ற விநியோகவழிப் பிரச்சினைகளே அந்தப் பலவீனமாகும். ஒரு குருட்டு நம்பிக்கையுடன், தனது மூலதனம் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஒரு நிச்சயமற்ற தொழிலில் முதலீடு செய்ய முனையும் ஒரு வர்த்தகனின் நிலையிலேயே இன்று சந்திரிகா அரசு உள்ளது; அதிர்ஷ்டவசமாக ஒருசில இலாபங்களையும் அந்த வர்த்தகன் பெறலாம்.

> சிங்கள அரசைப் பொறுத்தளவில், இப்போது, ஒரு போர்ச்சூதில் அது இறங்கி உள்ளது. பாரிய ஆட்தொகை — பிரமாண்டமான படைக்கல சக்தி என்ற இரண்டையுமே துருப்புச் சீட்டுகளாக வைத்து இந்தப் போர்சூதை வென்றுவிட சிங்கள அரசு முயல்கின்றது. இந்தப் போர்ச்சூதில் சிங்கள அரசைத் தோற்கடிப்பதற்கு, புலிகள் இயக்கத்திற்கும் இந்த இரண்டு துருப்புச்சீட்டுக்களே தேவையாக உள்ளன.

இந்தவகையில் தனது கைகளைவிட்டுத் தூர விலகிக் கொண்டிருக்கும் வழங்கல் பாதைகளை நம்பி பல்லாயிரம் படையினரைப் போரில் இறக்கும் ஒரு சூதாட்ட முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டுள்ளது சிங்கள அரசு எதிர்கொண்டு நிற்கும் இந்த வழங்கல் பாதைப் பிரச்சினைக்கு 02-10-95 அன்று திருமலைக் கடற்பரப்பில் நடந்த கடற்சண்டை சிறந்த நல்ல உதாரணமாக இருக்கும்.

தரைச் சண்டையில் சில வெற்றிகளை அரசுப் படைகள் பெற்றாலும்கூட, அதன் அடிப்படையான இராணுவ பலவீனத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். மூழ்கும் கப்பலின் மேற்தளத்தில் இருந்தபடி போரிடும் அந்தக் கப்பலின் மாலுமிகள் பெறும் சில வெற்றிகளைப் போலவே, குடாநாட்டில் உள்ள படையினர் பெறும் வெற்றிகளும் இருக்கின்றன.

ஆனால், தமிழினம் விரைந்து செயற்பட வேண்டும். கப்பலின் ஓட்டையை அடைத்துப் பயணத்தை தொடர, எதிரியை நாம் அனுமதிக்கக்கூடாது; அது எமக்கு ஆபத்தானது!

எனவே, எதிரியின் பலவீனத்தைப் படுதோல்வியாக அவனுக்கு மாற்றிக் கொடுக்கப் புலிகள் இயக்கத்திற்குத் தேவையானது. ஆட்பலமும்-படைக்கல சக்திப் பலமும் ஆகும்!

(ஐ)

## நிவாரணப் பொருள்களை அனுப்ப அரசு மறைமுக தடை போடுகிறதா?

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களை அனுப்ப மறைமுகமான தடைகளை அரசு விதிப்பதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

குடாநாட்டு மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றி வருவதற்காக "லங்கா கல்யாணி", "லங்கா முடித" ஆகிய கப்பல்களை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியிருந்தது.

இவ்விரு கப்பல்களில் 'லங்கா முடித'வை படையினர் தமக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்வதற்குப் பெற்றதைபடுத்து —

ஒரேயொரு கப்பலே நிவாரணப் பொருளை ஏற்றிவர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

'லங்கா முடித'வுக்கு பதிலாக மற்றொரு கப்பலை பெற எதுவித நடவடிக்கையும் எடுக்காத புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு —

'லங்காமுடித' மூலமும் பொருளை அனுப்புவதில் அக்கறை காட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

குறைந்தது ஒரு வார காலத்தில் இக் கப்பலில் பொருள்களை ஏற்ற முடியும்.

ஆனால் கப்பலில் தொழில்நுட்பக் கோளாறு என்று காரணம் காட்டி மிகவும் ஆறுதலாகவே பொருள்கள் ஏற்றப்படுவதாகவும் —

இக்கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பட மேலும் கால தாமதமாகும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதத்தில் இக்கப்பலில் ஏற்றப்பட்ட பொருள்கள் செப்டம்பர் மாதத்தில் இங்கு எடுத்து வரப்பட்டிருந்தன.

கடந்த மூன்று மாத காலமாக எந்தவித நிவாரணப் பொருள்களும் வடக்கே அனுப்பப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

[ஐ-6]

## பலாலி முகாமில் இன்னும் 36 பேர் தடுத்துவைப்பு

பலாலி இராணுவ முகாமில் இன்னமும் 36 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன் தினம் விடுதலையானோர் தெரிவித்தனர்.

இவர்களில் அநேகமானோர் சீவல் தொழிலுக்குச் சென்ற வேளை கைது செய்யப்பட்டதாகவும், இவர்கள் தமது தொழிலுக்குப் பயன்படுத்தும் முட்டிப் பானைகள், கத்திகள் கொண்ட இயனக்கூடுகள், கள் இறக்கும்சிறியகொள்கலன்கள் போன்ற பொருள்களை படையினர் தமது பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

சங்கானை, சுழிபுரம், பண்டத்தரிப்பு வட்டுக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த சீவல் தொழிலாளர்களே இவ்விதம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர். [ஒ-173]

## இரவில் பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகும் மக்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 6

கடந்த சில தினங்களாக இரவு வேளையில் பலாலி படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி வலி. கிழக்கு மக்கள், இரவுப் பொழுதை பதுங்குகுழிகளுக்குள் கழித்து வருகின்றனர்.

கோப்பாய், இருபாலை, உரும்பராய் மற்றும் கோண்டாவில் சில பகுதிகளில் இரவில் வீடுகளில் தங்கும் மக்கள் பதற்றமான நிலையில் இரவைக் கழிக்கின்றனர்.

(ஒ-4)

## மாணவரிடம் பணம் விதை சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் பாடசாலை மாணவர்களிடமிருந்து ஓர் கணிசமான தொகை பனம் விதைகளை அவர்களின் அன்பளிப்பாக பெறுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருவதாகவும், பயிர் செய்யப்படாது தரிசு நிலங்களாக இருக்கும் பாடசாலை வளவுகளில் ஆசிரியர், மாணவர்களின் ஒத்துழைப்போடு பனம் விதைகளை நடத் [illegible] தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## அன்ரனோவை மீட்போம்: விமானப்படை நம்பிக்கை!

கொழும்பு. ஒக் 6

கடலில் விழுந்து மூழ்கிய "அன்ரனோவ்- 32" விமானத்தை மீட்கமுடியும் என விமானப்படை மீண்டும் நம்பிக்கை தெரிவித்துள்ளது

கடலில் விழுந்து மூழ்கியுள்ள இந்த விமானத்தின் ஒரு பகுதி மட்டுமே சிதைவுற்று இருக்க முடியும்: எனவும்—

ஏனைய பெரும் பகுதி நொருங்கியிருக்கக்கூடிய சாத்தியம் இல்லை எனவும்—விமானப்படையினர் கூறுவதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

காலநிலை சீர்கேடும், இயந்திரக் கோளாறுமே இந்த விமானம் விழுவதற்குக் காரணம் என மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஒக் 6

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான செப்டம்பர் மாதத்திற்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாவலர் வீதியில் அமைந்துள்ள தற்காலிக காரியாலயத்தில் வழங்கப்படும் என கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்தார். [ஓ]

### அறிவுசால் ஆசானே தெய்வம்

ஆசகற்றும் ஆசிரியர் அன்பாய் அறிவூட்டி
தேசு புகழ திகழ்ந்தவர்கள் - மாசகற்றும்
ஆசிரியர் எங்கள் அருள்ஞானத் தெய்வமென
டேசிடுவீர் சேவை புகழ்ந்து.

அறிவை அறிவால் அறிந்திடச் செய்த
அறிவுசால் ஆசானே தெய்வம் - நெறியாக
எண்ணும் எழுத்தும் எமக்களித்த ஆசிரியர்
கண்கண்ட தெய்வமெனக் காண்.

— சித்தூர்ரத்தினம்.

### அடித்தளம் அமைப்பவன்

அறிவும் மலர்ந்திட ஆற்றலும் சிறந்திட
மனமுவந் துழைப்பவன் ஆசிரியன் - இங்கு
நெறிமுறை நேர்வழி மனுதினம் காட்டியே
நிலமிசை வாழ்பவன் ஆசிரியன்.

இலட்சியப் பற்றுட லர்ப்பண வாழ்வினுக்(கு)
அடித்தள மமைப்பவன் ஆசிரியன் - என்றும்
கலங்கித் தெளிந்திடும் வல்லமை யூட்டியே
தரணியி லுயர்ந்தவன் ஆசிரியன்.

— மாரீசன.

(ஆசிரியர் நாள் இன்று உலகளாவிய அளவில் கொண்டாடப்படுகிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக ஆசிரியர் தினத்தில்

கொழும்புத்துறை

## சென் யோசவ்ஸ் வித்தியாலய

அதிபர், பிரதி அதிபர் ஆசிரியர்களை

## வாழ்த்துகின்றோம்

''அறிவின் ஒளி விளக்கு – நம் ஆசான் என்னும் திரு விளக்கு''

— மாணவர்கள்.

06 – 10 – 1995 (38870)

# நாளுக்குநாள் விலை ஏறும் வாழைப்பழம்

யாழ்ப்பாணம் ஒக். 6

யாழ். குடாநாட்டில் தற்போது வாழைப்பழத்தின் விலை என்றும் இல்லாதவாறு விலை அதிகரித்துள்ளது.

சாதாரணமாக கதலி வாழைப்பழம் கிலோ 32 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை தரத்திற்கேற்ப விற்பனையாகிறது.

வாழைச் செய்கை அதிகளவு உள்ள சில பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-15)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

## ச. சிவமகிபன்

வண்ணை கலட்டி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சற்குணநாதன் நடேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

சிவமகிபன்

தனது முதலாவது பிறந்த தினத்தை கடந்த 2-10-95 திங்கட்கிழமை சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அப்பம்மா, அப்பா, அம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, மாமாமார், அத்தைமார் எல்லோரும் வல்ல கலட்டி மகமாரி அம்மன் அருள்கொண்டு சகல கலைகளையும் கற்று சிறப்புடன் வாழவாழ்த்துகின்றனர்.

(38873)

# கிறிக்கெட் சுற்றுப் போட்டி

எஸ். எம். பெர்னாண்டோ

ஆதரவில்

## யாழ். மிட் – ரவுண் றோற்றறக்ற் கழகத்தினால்

நடத்தவுள்ள

கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான

விண்ணப்ப முடிவு திகதி: 07 – 10 – 1995

நண்பகல் 12-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் 4-30 மணிக்கு அணி ஒழுங்குகளின் தெரிவு எமது கழக மண்டபத்தில் (83, கோயில் வீதி, நல்லூர்) நடைபெறும். அணித் தலைவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

– செயற்திட்ட இயக்குநர்.

(சி 2418)

# கொழும்பு ஆஸ்பத்திரிக்கு இந்திய டாக்டர்

கொழும்பு, ஒக். 6

கொழும்பு ஆஸ்பத்திரியில் இருதய நோயினால் அவதிப்படும் சிறுவர்களுக்கு சத்திர சிகிச்சை அளிக்க சென்னையிலுள்ள இருதய சத்திர சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் கே. எம். செரியன் முன் வந்துள்ளார்.

தற்போது இருதய சத்திர சிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டிய அநேக பிள்ளைகள் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதில்லை.

இதனை அறிந்துகொண்ட டாக்டர் செரியன் தாமாகவே சேவையை அளிக்க முன் வந்துள்ளார். (எ)

# வாழ்த்துச் செய்தி

## உலக ஆசிரியர் தினம்

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சகல ஆசிரியர்கள், அதிபர்களுக்கு உலக ஆசிரியர் தினத்தையொட்டி கோட்டக்கல்வி அலுவலகம் தன் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து, வருங்காலங்களிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் சிறப்புடன் சீரிய பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.


தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக எல்லோரும் ஒன்றுகூடி மேற்படி தினத்தைக் குதூகலமாகக் கொண்டாட முடியாத நிலைக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அலுவலக உத்தியோகத்தர்கள்.
ஊழியர்கள்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி.
04 – 10 – 1995. (சி-2419)

# 90-ம் நாள் நினைவஞ்சலி

[06 - 10 – 1995]



மலர்வு: 03 – 11 – 1935

உதிர்வு: 09 – 07 – 1995

எமது அன்புத் தலைவன்

## பிலிப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை

(கிராம அலுவலர் இல்லாலை)

எமது அன்புத்தலைவனே!

எமது தலைவராய், உயிராய், அன்பாய் இருந்து எம்மை விட்டு பிரிந்து 90 நாள் பறந்ததைய்யா, ஐயா, ஐயா, ஐயா.

கொடியவன் இழைத்த கொடூரம் கொடுமையால்
துடிதுடித்துப் போனாயே!
அயலவன் உன்னைக் கொண்டு போனானே
உமது நினைவுகள் எல்லாம் பொடியாச்சே,
எனினும் உமது எண்ணம் நிறைவாக
நாம் என்றும் எம்பணி செய்வோமே,
உம் உடல்தான் எம்மை விட்டகன்றாலும்
உமது அன்பின் நினைவு எம்மை விட்டென்றும்
அகலாது.

அயலவன் உம் உடலைக் கொன்றான்
ஆனால் உம் உயிரைக் கொல்லமுடியாது
என்றோ ஒருநாள் எம் ஆண்டவரின் சித்தம்
இருந்தால்
நாம் திரும்பவும் உயிர்தெழுதலில் சந்தித்து
என்றும் வாழ்வோம் என நம்புகிறோம்.
''அவர்களுடைய கண்ணீர் யாவையும்
தேவன் துடைப்பார் – இனி
மரணமும் இல்லை, துக்கமும் இல்லை,
அலறுதலும் இல்லை–
முந்தினவைகள் ஒழிந்துபோம்''

வெளி — 21 — 4

என்றும் எமது நினைவில் அன்பில்;

மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீங்காத நினைவில்
ஒக்டோபர் – 6



திருமதி

## பிலோமினம்மா டானியல்

(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் மனைவி)

பிறப்பு: 25 – 05 – 1931

இறப்பு: 06 – 10 – 1986

எமது நல்வாழ்வின் உயர்ச்சிக்காகவும், மறைந்த தங்கள் கணவரின் அரசியல், இலக்கிய சமுதாய உயர்ச்சிக்காகவும் உங்கள் கடமையைச் சரிவரச் செய்த உங்கள் பசுமையான நினைவுகள் எம்மனதில் என்றும் நிலைத்திருக்கின்றன.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''வசந்தம்''
76/2, கோவில் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(38874)

# சென். பற்றிக்ஸ் கல்லூரி

அதிபர், ஆசிரியர்களை

உலக ஆசிரியர் தினத்தில்

பல்சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு பணியாற்ற

## வாழ்த்துகிறோம்

– பழைய மாணவர் சங்கம்.

59, சென் பற்றிக்ஸ் வீதி.
யாழ்ப்பாணம். (38871)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

( 06 – 10 – 1995 )



தோற்றம்: 10 – 08 – 1942

மறைவு: 06 – 09 – 1995

## அமரர் ஆறுமுகம் மகாதேவன்

(வேலணை)

அறிவெனும் ஒளிதந்த அணையா விளக்கே!
எம்மை எல்லாம் வழிநடத்திய வழிகாட்டியே!
பாசம் எனும் மழையாக்கி கார்மேகமே!
ஆறாத்துயரில் எமையாழ்த்தி,
மீளாத்துயில் கொண்டதேன்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், உற்றார், உறவினர்.
மற்றும் நண்பர்கள்.

1ஆம் யூனிற், இல: 102,
முரசுமோட்டை. (38875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்தல் மிளகாயைத் தணலில் போட்டு காரத்தைச் சுவாசிக்க வைத்து சித்திரவதை

## பலாலி முகாமில் இருந்து விடுதலையானவர் தகவல்

வடமராட்சி ஒக். 6

செத்தல் மிளகாய் இடப்பட்ட அலுமினியச் சட்டியில் நெருப்புத் தணல் இட்டு காரம் வரும் வரை புகைக்க விட்ட படையினர் அதனை சுவாசிக்க வைத்து கொடூரமான முறையில் துன்புறுத்தினர்.

இவ்வாறு கடந்த புதன்கிழமை பலாலி முகாமிலிருந்து விடுதலையான ஆனைக்கோட்டை சாவற்கட்டு வாசியான குமாரசிங்கம் குலதெய்வம் (26 வயது) என்பவர் உதயன் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இரு படகுகளில் தலா நாலு பேர் வீதம் எட்டுப்பேர் அராலிக் கடலில் மீன்பிடிப்பதற்காக கடந்த ஜூலை 26 ஆம் திகதி சென்றோம். மீன்களைப் பிடித்துக் கொண்டு மறுநாள் காலை 3 மணியளவில் நாம் திரும்பிக் கொண்டிருந்த போது அங்கு வந்த படையினர் நில்லுங்கோ என நல்ல தமிழில் கூறி தம்மை வழிமறித்தனர். அவ்வேளை எமது இருபடகுகளிலும் வந்தவர்களில் தலா இருவர் வீதம் நான்கு பேர் கடலுக்குள் குதித்து விழுந்து நீந்தி எப்படியோ தப்பித்துக் கொண்டனர்.

எங்கள் நால்வரையும் பிடித்துக் கொண்ட படையினர் தங்களை விசாரித்து விட்டு ஒரு மணி நேரத்தில் விட்டு விடுகிறோம் என சுத்த தமிழில் கூறி எம்மை அழைத்துச் சென்று அராலித்துறையில் ஏற்றினர்.

அராலிக் கடலில் எங்களை படையினர் கைது செய்த போது எம்முடன் தொழிலில் ஈடுபட்டு விட்டு மற்றொரு படகில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வட்டுக்கோட்டை வாசிகள் இருவரையும் சேர்த்துக் கைது செய்திருந்தனர்.

### கண்களைக் கட்டி கிடங்கினுள் போட்டனர்

இவர்களையும், எங்களுடன் சேர்த்து கைது செய்து கொண்டு சென்ற படையினர் அராலித்துறையில் ஏற்றியதும் அங்குள்ள கிடங்கு ஒன்றில் எமது கண்களைக் கட்டி விட்டு போட்டனர். சுமார் இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் கிடங்கிலிருந்து எம்மை தூக்கி எடுத்து சப்பாத்துக் காலால் கண்டபடி அடித்தனர்.

அதன் பின்னர் எமது கைகளை பின்புறமாக வைத்து விலங்கிட்டபடி கண்கள் கட்டப்பட்டபடியே வாகனம் ஒன்றில் ஏற்றி எங்கோ அழைத்துச் சென்றனர்.

வாகனம் சிறிது தூரம் சென்ற பின்னர் எங்களை இறக்கி ஒரு வீட்டின் அறையில் விட்டனர். அங்கு வைத்தும் இராணுவ தினர் வந்து அடிக்கடி தாக்கினார்கள்.

ஏற்கனவே கண்கள் கட்டப்பட்டிருந்ததால் எம்மைப் படையினர் தடுத்து வைத்திருக்கும் இடம் ஏதோ ஒரு தீவு என்பதை மட்டும் நாம் உணர்ந்து கொண்டோம்.

மதிய சாப்பாட்டுக்குப் பிறகு மீண்டும் எமது கண்கள் கட்டப்பட்டு, கைகள் பின்புறமாக விலங்கிடப்பட்டு ட்ரக் வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டு நீண்ட தூரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்குள்ள வீடொன்றில் அதே நிலையில் தங்க வைக்கப்பட்டோம். படையினரின் உரையாடலில் 'கைட்ஸ்., கைட்ஸ் என அடிக்கடி ஒலித்தது. இதிலிருந்து நாம் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவ்விடம் ஊர்காவற்றுறை என உணர்ந்தோம்.

இங்கு நாம் தங்கவைக்கப் பட்டபோது மிகக் கொடூர சித்திரவதைக்குள்ளானோம். அது மட்டுமன்றி கால்களும் கட்டப்பட்டு தலைகீழாக, எமது தோள்கள் மட்டுமே நிலத்தில் முட்டக்கூடியவாறு வளைத்தபடி பலமணி நேரம் தொங்கவிடப்பட்டோம். இதனால் எனது கால்கள் விறைத்து கட்டிபோல ஆகிவிட்டது. இதனால் நடப்பது கஷ்டமாக இருக்கிறது.

சித்திரவதைக்குட்படும் போது ஏற்படும் தாகத்தை தணிக்க தண்ணீர் தண்ணீர் எனக் கத்துவோம். ஆனால் தண்ணீர் தர மாட்டார்கள். இவ்வேளைகளில் நாம்பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காது.

இந்தச் சித்திரவதை 24 நாள்கள் வரை தொடர்ந்து நடைபெற்றது. 25 ஆவது நாள் பலாலி முகாமுக்கு நாம் அழைத்துச் செல்லப் பட்டோம்.

பலாலி முகாமிலும் பல துன்புறுத்தல்கள் எம்மீது மேற்கொள்ளப்பட்டன. விடுதலையாவதற்கு முதல்நாள் கூட தாக்கப்பட்டோம்.

--- இவ்வாறு அவர் கூறினார். (ஓ-173)

# பிரெஞ்சு இராணுவ தலையீட்டால் கொமோரொ தீவில் சதி புரட்சி முறியடிப்பு!

இந்து சமுத்திரத்தில் உள்ள கொமோரொ தீவில் இடம் பெற்ற சதிப் புரட்சி பிரெஞ்சு இராணுவத் தலையீட்டினால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

கூலிப்படைத் தலைவர் பொப் டெனாட் தலைமையில் கலகப்படையினர் கடந்த வியாழனன்று கொமோரொ தீவில் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர்.

சுமார் 900 பிரெஞ்சுப் படையினர் நேற்று முன் தினம் ஹெலிக் கொப்டர்கள் மற்றும் போர்க் கப்பல்களின் துணையுடன் கொமோரொ தீவின் தலைநகர் மொரோனியில் தரையிறங்கி கலகப்படையினரை விரட்டியடித்தனர்.

பிரான்ஸ் எடுத்த இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து கலகப்படைகள் சரணடைந்தன.

இராணுவ முகாம் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த கொமோரொ தீவின் ஜனாதிபதி சையத் மொஹமட் விடுவிக்கப்பட்டார்.

பிரெஞ்சு தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த பிரதமர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இந்த சதிப் புரட்சியில் ஈடுபட்ட கூலிப்படையினருக்கு பொது மன்னிப்பு வழங்கப் படும் என்று அவர் அறிவித்துள்ளார். (ஐ)

# செவ்வாய்க் கிரகத்தில் வளி மண்டலம் இருந்தது

## அமெ. விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வாஷிங்டன் ஒக். 6

பூமிக்கு இருப்பதைப் போன்ற வளிமண்டலம் ஒன்று முன்னர் செவ்வாய்க் கிரகத்திலும் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

அங்கு காணப்பட்ட வளி மண்டலம் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவாக இருந்திருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

செவ்வாய்க் கிரகத்தில் இருந்து ஒரு காலத்தில் பூமிக்கு வந்து விழுந்த விண்கல் ஒன்றின் வெட்டு முகத்தை ஆய்வு செய்த அமெரிக்க விஞ்ஞானிகளே இதனை அறிவித்தனர்.

இந்த விண்கல்லை ஆய்வு செய்தபோது அது செவ்வாய்க்கிரகத்தில் முன்பு காணப்பட்ட வளிமண்டலத்தின் வாயுக்களை உறுஞ்சியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

எனினும் அங்கு காணப்பட்ட காபனீரொட்சைட்டுக்கு என்ன நடந்தது என்பது சம்பந்தமான முடிவுகள் இன்னமும் பெறப்படவில்லை.

செவ்வாய்க் கிரகத்தில், பனிப்பாறைகளில் இந்த காபனீரொட்சைட்டு உறைந்து காணப்படலாம் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

ஐஸ்லாந்தில் காணப்படும் பனிப்பாறைகள் காபனீரொட்சைட்டை உறிஞ்சி பூமிக்கடியில் படியச் செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# "நெம்பு" வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஒக். 6

"நெம்பு" சஞ்சிகையின் ஜூலை — ஓகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது.

அந்த இதழில் சமூகம், மருத்துவம், அறிவியல், விளையாட்டு, வானியல், வரலாறு, காகிதக்கலை போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த கவிதை, கட்டுரை, சிறுகதை என்பன இடம்பெற்றுள்ளன. (எ)

# சிவாஜிக்கு சுகயீனம்

சென்னை ஒக். 6

தென்னிந்திய திரைப்பட நடிகர் சிவாஜி கணேசன் இருதயநோய் காரணமாக கடந்த திங்களன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சிவாஜி கணேசன் கடந்த ஞாயிறன்று தனது 68 ஆவது பிறந்தநாளை கொண்டாடியிருந்தார். (ஐ)

# மெக்ஸிகோவில் மழை, புயல்!

மெக்ஸிகோ, ஒக். 6

மெக்ஸிகோவின் காம்பச்சி, தபாஸ்கோ ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட மழையிலும் புயலிலும் 10 இற்கு மேலானோர் இறந்து போனார்கள். ஒரு கட்டத்தில் புயல் மணித்தியாலத்துக்கு 240 கிலோ மீட்டர் வேகத்தில் வீசியதாகவும் கட்டடங்களும், பயிர்களும் சேதம் அடைந்துள்ளன என்றும் அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க மாநிலங்களான புளோரிடா, அலபாமாவிற்கும் புயல் பாய்ந்து மக்களை வீடுகளை விட்டு ஓட வைத்தது. இதனால் 16 கிலோ மீட்டர் தூர போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (த-க)

# ம. பொ. சியின் பூதவுடல் தகனம்

சென்னை, ஒக். 6

மறைந்த தமிழறிஞர் ம. பொ. சிவஞானத்தின் உடல் திரளாகக் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை சென்னையில் தகனம் செய்யப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி, மத்திய அமைச்சர் கே. வி. தங்கபாலு, தமிழக அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். [ஐ]

# அரபாத் - ராபின் ஒப்பந்தம் மற்றும் ஒரு மைல் கல்

பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாஸிர் அரபாத்தும் இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபினும் கடந்த செப்ரெம்பர் 28ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் கைச்சாத்திட்ட பலஸ்தீன சமாதான உடன்படிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

பலஸ்தீன இராச்சியம் உருவாகுவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகுக்கும் என்று சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அரபாத் அறிவித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் பெரும்பாலான பகுதியை பலஸ்தீனர்கள் கட்டுப்பாட்டுக்கு மாற்றும் ஒப்பந்தமாக இது அமைகிறது.

1948ஆம் ஆண்டு தனது இளம் பராயத்தில் இஸ்ரேலுக்கு எதிராக முதலாவது சண்டையில் பங்குபற்றிய அரபாத்தும் அச்சமயம் இஸ்ரேலிய படைத்தளபதியாக இருந்த பிரதமர் ராபினும் 400 பக்க பலஸ்தீன சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தம் வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்ட சமயம் யூதக் குடியேற்றவாசிகள் ராபின் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் போவதாகச் சூளுரைத்து ஹெப்ரோனில் கூடினர்.

இஸ்ரேலியர்களால் 28 வருடங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்ட மேற்குக் கரைப் பிரதேசத்தை பலஸ்தீனர்களுக்கு ராபின் கொடுக்கிறார் என யூதக் குடியேற்றவாசிகள் குரல் எழுப்பினார்கள்.

பைபிளில் குறிப்பிட்டுள்ளபடி யூதமக்களுக்கு என்றே கடவுளால் வழங்கப்பட்டது இந்த நிலம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த ஒப்பந்தப் [illegible] குக் கரை நகரங்களும் 400 கிராமங்களும் பலஸ்தீன சுயாட்சிக்குள் அடக்கப்படுகின்றன.

இந்த ஒப்பந்தம், இரண்டு வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் செய்துகொண்ட மத்திய கிழக்கு சமாதான உடன்படிக்கையின் மிக உயர்ந்த உச்சகட்ட முயற்சியின் வெளிப்பாடு ஆகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வைபவத்தில் உரை நிகழ்த்திய அரபாத், ''வன்முறையை முற்றாகக் கண்டிக்கிறோம். கொலைகள் நடந்தது போதும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதும் போதும்'' என்று கூறினார்.

1967 ஆம் ஆண்டு முதல் யுத்தத்தின் மூலம் கைப்பற்றிய பிரதேசத்தை பலஸ்தீனர்களுடன் பகிர்ந்து அவர்களை எமது அயலவர்களாகக் கணித்து அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதி இந்த வைபவத்தில் பேசுகையில், மத்திய கிழக்கு சமாதான முயற்சியில் சிரியாவும் லெபனானும் பங்குபற்றாதவரை அது முற்றுப் பெறாது. எனவே அவர்களையும் இதில் பங்குபற்றச் செய்து மத்திய கிழக்கில் அமைதியான சூழலை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும் என்றார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்தில் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கும் ஜோர்டான் மன்னர் ஹுசெய்னும் கலந்து கொண்டார்கள்.

## செய்தியின் பின்னணியில்

தொகுப்பு: புதினன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## இலக்கணம்

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஒத்த கருத்துச் சொற்களும், எதிர்கருத்துச் சொற்களும் ஆண்டு 5, 6, 7, 8, 9, 10 மாணவர்களுக்கு. தொகுப்பு: வெ. நவமோகன். விற்பனையாகின்றது பூபால சிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2399)

## விற்பனையாகின்றது

நல்லின திராட்சைப் பழக் கன்று மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்! மேஜர் பிரதாப் செடிப் பண்ணை, இராசவீதி, கோப்பாய். (சி-2414)

## சோதிடம்

சாதகம் கணித்தல், எதிர் காலப் பலன்கள், விவாகப் பொருத்தம், கூமுகூர்த்தம், திருமணத் தடைக்குப் பரிகாரம் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நண்பகல் வரை. கு. சிவபாலசுந்தரம் பிள்ளை, இல. 53/5 கன்ன சந்திர ஒழுங்கை, கந்தர் மடம். (38862)

ஜாதகக் குறிப்பு எழுத, பலன் பார்க்க, கல்வி, திருமணம், தொழில் எதிர்காலப் பலன், விவாகப் பிரச்சினைகள், செவ்வாய் ராகுதோசம் நீங்க ஜாதகக் குறிப்புடன் வரவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (38863)

# தொண்டா, அலவி பாலா தம்பு கௌரவிப்பு

கொழும்பு, ஒக். 6

தொழில் தொழிற்பயிற்சி அமைச்சின் ஏற்பாட்டில் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர்கள் நான்கு பேர் கௌரவிக்கப்பட உள்ளனர்.

எஸ். தொண்டமான், அலவி மௌலானா, எம். ஜி. மென்டிஸ், பாலா தம்பு ஆகிய இவர்களைப் பாராட்டும்விழா சுகததாஸ் உள்ளரங்கில் நாளை சனிக்கிழமை நடைபெறும். (ஒ-ஸ)

# றோட்டரி தலைவராக புத்தபிக்கு!

கொழும்பு, ஒக். 6

கொலன்னாவ றோட்டரி கழகத்தின் தலைவராக பண்டிதியே சோமவன்ஸ தேர என்ற புத்தபிக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

உலகில் புத்த பிக்கு ஒருவர் றோட்டரிக் கழகத்தின் தலைவராகியது இதுவே முதற் தடவையாகும். (ஒ-ஸ)

# ஒரு போத்தல் கள் ரூ. 13 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 6

குடாநாட்டில் தற்போது கள்ளின் விலை 2 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு போத்தல் கள் 11 ரூபாவில் இருந்து 13 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

பனைகளும் அருகி தென்னங்கள் விற்பனையில் இருப்பதால் இவ்விலை உயர்வு ஏற்பட்டுள்ளது என்றும்—

மேலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பனைகளுச் சீவ முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்தே கள்ளுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-15)

---

யாழ். கொழும்புத்துறை

# இந்து மகா வித்தியாலயம் உலக ஆசிரியர் தினம்-1995

ஆசிரியர் தினம் இன்று (06-10-95) வெள்ளி காலை 10மணிக்கு தொடங்கி வித்தியாலயத்தில் அபிவிருத்திச் சங்கம் மாணவர்கள் ஆகியோரால் கொண்டாடப்படும்.

இத்தினத்தில் அதிபர் சி. ஆ சோதிலிங்கம் அவர்களையும், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

வித்தியாலய
அபிவிருத்திச் சங்கம்.

(38867)

# ஆசிரியர் தினவிழா

கைதடி
முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்
(06 – 10 – 1995)

பண்பு கருவூலங்கள், விழுமியங்களைப் பேணிக் காத்துக் கல்விப் பயிரை வளர்த்து எழில்மிகு எதிர்காலச் சிறார்களை ஆக்கும் எம் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் 06 - 10 - 95 வெள்ளியாகிய இன்று நினைந்து சேவையை வாழ்த்தி அவர்கள் இறையருள் பெற்று இனிதும் நலனும் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள், நலன்விரும்பிகள்,
பழைய மாணவர்கள், மாணவர்கள்.

(38859)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவி
றஜித்தா செல்லையாவின் சகோதரன்

## 2ஆம் லெப்டினன் தமிழ்மன்னன்
(சசிக்குமார்)

01-10-95இல் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவருக்கு கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

சக மாணவர்கள்,
H. N. D. A. II வருடம்,
யாழ். தொழில் நுட்பக்கல்லூரி.

[58865]

# 31ஆம் நாள் சபிண்டீகரணக் கிரியையும் நினைவஞ்சலியும்



அமரர்

## ஆத்மஜோதி நாகமணி முத்தையா

அவர்களின் சபிண்டீகரணக்கிரியையும், ஆத்மசாந்தி வழிபாடும் 08 - 10 - 1995ஞாயிறு காலை 8-00மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். தற்போதைய சூழ்நிலையில் தனிப்பட்ட அழைப்புகளை உரிய காலத்தில் அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

- குடும்பத்தினர்.

"குரு மனை"
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(38861)

---

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அண்மையில் இராணுவத்தினரின் அகோரமான ஷெல் வீச்சில், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்திற்கு அருகில் விழுந்த ஷெல்லுக்குப் பலியான 5 சிறுவர்களதும் — நாகர்கோயில் மகா வித்தியாலய சுற்றாடலில் புக்காரா விமானம் மேற்கொண்ட குண்டு வீச்சில் பலியான பாடசாலை மாணவர் உட்பட பொதுமக்களதும் — ஆத்ம சாந்திக்காக, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாரதா சேவாச்சிரமத்தில் பஜனையும், வழிபாடும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. [ஏ]

# 45-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 — 06 — 1925 | 22 — 08 — 1995 |

அமரர்

## சுப்பிரமணியம் கனகரத்தினம்
(அராலி)

உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணிக்கர் வளவு,
திருநெல்வேலி.

(38849)

# REMEMBERING ON HIS 70TH BIRTHDAY



## PUSHPARAJAH MAHENDRAN SITHAMPARAPILLAI

B. Eng (Civil) Madras, M. S. (Civil Eng.) Standford (Calif)
C. Eng. M. I. C. E. (London) F. I. E. Sri Lanka

BORN ON OCTOBER 6th 1925
DIED ON APRIL 18th 1995

A bitter grief, a shock severe
To part with one we lived so dear
Our loss so great we'll not Complain
But hope in heaven to meet again

Irreparable loss was our beloved brothers demise on the 18th of April this year in Canada, leaving his grief - stricken family and his well adored Sisters & Brothers and Brothers - in - law to pine for him all the years.

Within us all, as he well deserves, his memory will be evergreen.

Oh, Dear Lord, Grant him
eternal rest.

GRIEVING SOULS.

29, Forest Office Lane,
Chundikuli

(38747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இருபக்கக் கைமாறு தேவை

இன்று ஒக்ரோபர் ஆறாம் நாள். உலகளாவிய ரீதியில் ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிறது. சமூக வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் ஆற்றும் சேவையை மதித்து, அங்கீகரித்து அவர்களைப் பாராட்டும் ஒரு நாளாக இது திகழ்கிறது.

நான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்ற பரந்த, விரிந்த நோக்குடன் தனது கல்வி ஞானத்தைப் பிறருக்கு பகிர்வு செய்யும், பயிற்றுவிக்கும் ஆசிரியனுக்கு— குருவுக்கு— ஆதிகாலம் தொட்டே சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உண்டு.

இளவயதில் மட்டுமன்றி ஒருவன் வயது முதிர்ந்த வேளையிலும், அவனது கண் கண்ட தெய்வங்களாக தாயும் தந்தையும், ஆசிரியனும் மதிக்கப்படும் காலம் இருந்தது.

அதே போன்று —

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் என்பதற்குச் சமமாக—

தனது மாணவன் சமூகத்தில் உயர்நிலையில் இருப்பது கண்டு மனநிறைவடைய வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் ஆசிரியர்கள் பணி செய்த காலமும் உண்டு.

தனது மாணவனை தனது பிள்ளையாகவே கருதி அவனுக்கு கல்வி புகட்டி அதில் ஆத்ம திருப்தி கண்ட ஆசிரியர்களே அப்போது பெரும் எண்ணிக்கையில் இருந்தனர்.

காலபோக்கிலும், கல்வி முறை மாற்றத்தினாலும் ஆசிரியர்களும் முந்திய ஆசிரியர்கள் அல்லர்; மாணவர்களும் முந்திய மாணவர்கள் அல்லர்; சமூகமும் முந்திய சமூகமல்ல என்ற நிலை இடையில் உருவாகியது.

அந்நிலை இன்னும் முற்றாக மாறவில்லை. சீர்பெறவில்லை. மாற்றத்துக்கான செயற்பாடு நத்தை வேகத்திலேயே நகர்கிறது எனலாம்.

மாணவனின் கல்வியில் அக்கறையும், அவன் வருங்கால நலனுக்கான அர்ப்பணிப்பும் உள்ள நல்லாசிரியர்களைத் தேர்ந்து எடுக்க வேண்டிய நிலை இன்னும் தொடர்கிறது!

ஆசிரியர்கள் எல்லோரும் நல்லாசிரியர்களே என்று கூறுதற்கான காலம் விரைந்து வர வேண்டும் என்பதே எமது விருப்பம்.

தமக்கான ஊதியம் குறைவாக இருப்பதால் தாம் வேறு பணிகளையும் ஆற்ற வேண்டியுள்ளதாக முன்னர் காரணம் கூறிய ஆசிரியர்கள் —

இப்போது தொழிற் சம்பளத் திட்டம் அமுலுக்கு வந்த பின்னரும்! மாணவர் கல்வியில் போதிய அக்கறை எடுக்கவில்லை — என்ற முறைப்பாடு பொதுவாகவே உள்ளது.

ஆசிரியரும் மாணவனும் சமூகமும் ஒருவருக்கு மற்றவர் பரஸ்பரம் உதவினால் மட்டுமே, ஒரு சாராரிடம் இருந்து மறுசாரார் மதிப்பைப் பெற முடியும் என்ற சமுதாயப்படி நிலையே இப்போது உண்டு.

மதிப்பைக் கொடுத்தால் மட்டுமே மதிப்பை வாங்க முடியும் என்ற காலம் இது. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் உழைத்தால் சமூகத்தில் பெருமதிப்புப் பெறலாம். சமூகம் — (மாணவனும்) — ஆசிரியர்களை மதித்தால் அவர்களின் அர்ப்பணிப்பான உழைப்பைப் பெறலாம்.

இருபக்க கைமாறு மட்டுமே நிலைமையைச் சீராக்கும். அதனூடாகவே தகுதிவாய்ந்த எதிர்காலப் பிரஜைகளை உருவாக்க முடியும்.

# எமது தேசத்தின் அறிவுச் சுடரை அணையவிடாது பாதுகாப்பது ஆசிரியர்களின் தலையாய பொறுப்பு

*தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன், உலக ஆசிரியர் நாளையொட்டி 1993ஆம் ஆண்டு வெளியிட்ட ஆசிச் செய்தி இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.*

மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஆதாரமாக அமைவது கல்வி. அந்தக் கல்வியை இளஞ் சமுதாயத்துக்கு ஊட்டுகின்ற உன்னத பணியை ஆசிரியர் சமூகம் மேற்கொண்டு வருகிறது. சமூகத்தின் சிற்பிகளாக சமூக மேம்பாட்டுக்கு உழைத்து வரும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுக்குரியவர்கள்.

எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியைச் சீர்குலைத்து, எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் சீரழித்து, எமது நிலத்தை ஆக்கிரமித்து, எம்மை இனரீதியாக அழித்தொழிக்க எமது எதிரியானவன் இன்று பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். இந்த இக்கட்டான போர்க்கால சூழலில் ஆசிரிய சமூகத்தின் பொறுப்பும் பங்கும் முக்கியமானது.

சகல நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத்தின் அறிவுச் சுடரான கல்வியை



அணைந்துவிடாது பாதுகாப்பது ஆசிரிய சமூகத்தின் தலையாய பொறுப்பாகும். அத்துடன் எமது சமுதாயத்தின் விடிவை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்பது கல்விமான்களின் கடமையாகும்.

எத்தனையோ இடர்களையும், தடைகளையும் எதிர்கொண்டு இந்தத் தேசியப் பணியில் எமது ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புணர்வுடனும் தேசியப் பற்றுணர்வுடனும், துணிவுடனும் செயலாற்றிவருவது கண்டு நான் பெருமை கொள்கிறேன். இந்நிலையில், எமது சமுதாய மேம்பாட்டின் ஏணிப்படிகளாகத் திகழும் இப் பெருந்தகைகளை ஏற்றிப்போற்றி மதிப்பளிப்பது எமது கடமையாகும்.

உலகெங்கும் ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டும் நாளாக ஒக்ரோபர் 6 ஆம் நாள் உலக ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலக சமுதாயம் நன்றியுணர்வுடன் கொண்டாடிவரும் இந் நன்னாளில் நாமும் எமது ஆசிரியர் சமூகத்தைப் பாராட்டிக் கௌரவிப்பது சாலச்சிறந்ததாகும்.

தமிழீழத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுவரும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் தமிழீழத்தில் உலக ஆசிரியர் நாளைச் சிறப்பாகக் கொண்டாட முன்வந்திருப்பதை மனமாரப் பாராட்டுகின்றேன். தமிழீழ ஆசிரிய சமூகம் சிறப்புற்றுவாழ எனது நல்வாழ்த்துக்கள்.

# பழைய மாணவர் சங்கங்களுக்கு அதிபரே தலைவராக வேண்டும்!

## சுற்றறிக்கைக்கு எதிராக வழக்கு வரும்?

கொழும்பு, ஒக். 6

பாடசாலைகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்களுக்கு பாடசாலை அதிபரே தலைவராக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கும் சுற்று நிருபம் ஒன்றை கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம். டி. டி பீரிஸ் சகல மாகாணங்களினதும் கல்வித் துறைப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இச்சுற்றுநிருபத்தின் பிரதிகள் மாகாணக்கல்வி அமைச்சர்களின் செயலாளர்களுக்கும், தேசியபாடசாலைகளின் செயலாளர்களுக்கும் உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

1995 ஜூன் 21 ஆம் திகதியிடப்பட்ட இந்தச் சுற்று நிருபத்தில்—

அதிபரை தலைவராகக் கொண்டிராத பாடசாலை பழைய மாணவர் சங்கங்களின்யாப்பை அதற்கு ஏற்ற வகையில் உடனடியாகத் திருத்தியமைக்கும் படியும்—

பழைய மாணவர் சங்கங்களின் காசோலைகளில் கையெழுத்திடும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக அப் பாடசாலை அதிபர் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தச் சுற்று நிருபம் குறித்து கொழும்பில் பலத்த சர்ச்சை இளப்பப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

★ பாடசாலையை விட்டு வெளியேறிய பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து சுயாதீனமாக அமைத்துச் செயற்படும் பழைய மாணவர் சங்கங்களை தமது சுற்று நிருபங்கள் மூலம் கட்டுப்படுத்தும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு உள்ளதா?

★ அவ்வாறு கட்டுப்படுத்த முடியாது என்ற கருத்தை முன்வைத்து, தற்போதுள்ள பழைய மாணவர் சங்கங்கள் கல்வி அமைச்சின் இந்த சுற்று நிருபத்தை ஏற்க மறுத்தால்—

அத்தகைய பழைய மாணவர் சங்கங்களை நிராகரித்து விட்டு, தமது கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய புதிய சங்கங்களை அமைக்கும்படி பாடசாலை அதிபர்களை கல்வி அமைச்சு தூண்டுமா?

★ ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்கள் வலுவாக இருந்து — அதிபர்களால் அமைக்கப்படும் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர பழைய மாணவர்கள் மறுத்தால் அதிபர்கள் அமைக்கும் சங்கங்களின் நிலை என்னவாகும்?

★ பாடசாலைகளில் மாத்திரம் அல்லாமல் — பாடசாலைச் சூழல்களில் மாத்திரம் அல்லாமல் — வெளியிடங்களிலும், வெளிநாடுகளிலும் கூட பாடசாலைகளுக்கு பழைய மாணவர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல கல்லூரிகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு பழைய மாணவர் சங்கம் உள்ளது போலவே கொழும்பிலும் இங்கிலாந்து கனடா, ஆஸ்திரேலியா, சுவிஸ், ஜேர்மன் போன்ற வெளிநாடுகளிலும் பழைய மாணவர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவை சுயாதீனமாக இயங்கி வருகின்றன. கல்வி அமைச்சின் சுற்றுநிருபப்படி இவ்வாறு கொழும்பிலும் வெளிநாடுகளிலும் உள்ள பழைய மாணவர் சங்கங்களுக்கு தலைவராகவும், அவற்றின் காசோலைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும் பாடசாலை அதிபர் செயற்பட முடியுமா?

— இவ்வாறு பல குளறுபடிகளுக்கு மத்தியில் —தெளிவில்லாத நிலையில் மேற்படி சுற்று நிருபம் வெளிவந்திருக்கின்றது.

ஆனால் இச்சுற்று நிருபத்தினால் குழப்பமடைந்துள்ள கொழும்பு பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் பல, இச் சுற்றுநிருபத்தை அதிபர்கள் மூலம் செயற்படுத்துவதற்கோ— அல்லது அதன் மூலம் தமது சங்கத்தின் சுயாதீன செயற்பாட்டைக் குழப்புவதற்கோ — கல்வி அமைச்சு முயற்சித்தால் அதை எதிர்த்து நீதிமன்றத்துக்கு செல்லப் போவதாகத் தெரிவித்துள்ளன.

கல்வி அமைச்சின் முயற்சிக்கு இடைக்காலத் தடை விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பில் உள்ள முக்கிய பாடசாலைகள் சிலவற்றின் பழைய மாணவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் —

கல்வி அமைச்சின் மேற்படி சுற்று நிருபத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எதையும் தென் பகுதியில் உள்ள மாகாண அமைச்சுகள் எடுத்ததாகத் தெரியவரவில்லை.

(உ)

# பன்னிரு வேங்கையர் நினைவுதினம் நேற்று

## உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

இந்திய — இலங்கை கூட்டுச் சதிக்கு பலியான 12வேங்கைகளின் எட்டாம் ஆண்டு நினைவு நேற்று தமிழீழ மக்கள் உணர்வுடன் நினைவு கூர்ந்தனர்.

1987 ஆம் ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் தளபதிகளான லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், லெப்டினன்ட் கேணல் குமரப்பா உட்பட கடற்புறா படகில் பயணம் செய்த போராளிகளை ஸ்ரீலங்கா கடற்படையினர் கைது செய்தனர்.

இவர்களை கொழும்புக்குக்கொண்டு செல்ல ஸ்ரீலங்கா அரசு முயற்சித்த போது 12 வேங்கைகளும் சையனைட் அருந்தி வீரச்சாவை தழுவினர்.

இதனைத் தொடர்ந்து இந்திய — விடுதலைப்புலிகள் போர் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

[இ-173-4]

## கௌரவிப்பு

கோண்டாவில் செம்மா தோட்டம் ஞானவயிரவர் ஆலய சங்காபிஷேக உற்சவத்தின் போது, இந்த ஆலயத்தின் பேரில் தான் இயற்றிய திருவூஞ்சல் பாடல்களைப் பாடிய பல்கலைப் புரவலர் நவாலியூர் நா. சச்சிதானந்தன் மற்றும் ஆலய வளர்ச்சிக்காக ஆரம்ப காலம் முதல் உழைத்து வரும் முதியவரான திரு பொன்னையா ஆகியோரைக் கௌரவித்து பொன்னாடை போர்த்தும் விழா அண்மையில் ஆலய மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் திரு இராசையா தலைமையில் நடைபெற்றது. (எ)

## வடக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மானது'' — என்று அதன் அமைப்பாளர் 'வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

## மாணவருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமுதாயம் ஆசிரியப்பணியில் சிறப்பினையே எதிர்பார்த்து நிற்கிறது.

இடம்பெயர்ந்து உற்றார், உறவினரையும், பெற்றோரையும் கூட இழந்து கண்ணுடைய வாழ்வு பெற நிற்கும் 'தூங்கும் சிறுவர் விழிப்படையவும், சோம்பும் சிறுவர் துடிப்படையவும், ஏங்கும் சிறுவர் நிறைவடையவும், இடறும் சிறுவர் நேர் நிற்கவும்' பாங்காய் அவரைப்பள்ளிக்கு வைத்துக் கல்வியில் ஆவர்மூட்டி, அவையும் பலங்களை ஆட்கொண்டு மங்கா அறிவு விளக்கேற்றி, எங்கள் மண்ணின் மைந்தர்களாக ஆக்க ஆசிரியர்கள் அனைவரும் ஒருமித்தும் தனித்தும் உழைக்கவேண்டும்

பாடசாலைகளை நிர்மூலமாக்கியும், இளஞ்சிறார்களினதும் பள்ளி மாணவர்களினதும் உயிர்களைக் குண்டு வீசி அழித்தும், கல்விக்குத் தேவையான வளங்களைப் பெறுவதற்குத் தடைவிதித்தும் கொடூரமான செயல்களைச் செய்யும் பகைவர்களது செயல்களுக்கு எமது அறிவு வளம் தலைபணியாது என்று சொல்லும் வகையில் ஒல்லும் வகையால் உறுதியோடும் தியாகத்தோடும் திரண்டு எழுந்து ஆசிரியர்கள் தொடர்ந்தும் பணியாற்றி எமக்கே சொந்தமான நிலையான ''கல்விப் பெருஞ்செல்வப் பேறைப் பெறுவோமாகுக! — என்பதாகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஆசிரியர் தின விழா இரத்துச் செய்யப்பட்டுள்ளது

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியான முன்பள்ளி ஆசிரியர்களை ஒருங்கிணைத்து திவ்விய ஜீவன மண்டபத்தில நடத்தப்படவிருந்த முன்பள்ளி ஆசிரியர் தின விழா நாட்டின் சூழ்நிலைகாரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம்,
மாவட்டச் செயலகம்,
கந்தபுராணவீதி, கந்தர்மடம்

(38879)

# மரண அறிவித்தல்கள்

## யோசவ் சிங்கராசா

நீர்வேலியைப் பிறப்பிடமாக கொணடவரும், தற்போது மூளாய் ஒழுங்கை, குருசோவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசித்து வந்தவருமான யோசவ் சிங்கராசா அவர்கள் 05-10-95 அன்று காலமானார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, லூர்த்தம்மா, செல்வராணி, சார்லஸ் யோசவ் (ஹொலண்ட்), அருள்மணி கலிஸ்ரா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுவாம்பிள்ளையின் (ஜேர்மனி) அருமைச் சகோதரரும், யோசவ் (மணியம்), இரத்தினசிங்கம், சிறிபாலா, பெனிற்றாசாந்தி, பஞ்சாட்சரம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை (06-10-95) பிற்பகல் 2-30மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து நீர்வேலி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அருட்தந்தை பிரான்சிஸ்.

குருசோ வீதி,
யாழ்ப்பாணம். (38866)

## திருமதி கனகசபை அன்னம்மா (வேலணை)

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கலாசாலை வீதி திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை - அன்னம்மா அவர்கள் 5 - 10 - 95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து கனகசபை அவர்களின் அன்பு மனைவியும் இராசலிங்கம், மல்லிகா தேவி, சொர்ணலிங்கம், காலஞ்சென்ற சிவமணி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற மதியாபரணம், செல்வராணி, மோகனநாயகி ஆகியோரின் மாமியாரும் மயூரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சௌந்தரராஜன், குணசீலன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி, ஸ்ரீகாந்தன், கேதீஸ்வரன், சிவரஞ்சினி, சோபனா, சத்தியரூபன், மகிபன், சுதர்சனா, கோபினி, சஜன், தர்ஷன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (6-10-95) இன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. சொர்ணலிங்கம்
[மகன்]

23/2 கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (38872)

## செல்லத்துரை இலட்சுமி

கொக்குவில் மேற்கு கேணியடியை சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவி இலட்சுமி 5 - 10 - 95 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் வேலாயுதபிள்ளை, இராஜரட்ணம் (லண்டன்) மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த செகராஜசிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்) கமலாம்பிகை, கமலாதேவி ஆகியோரின் அருமை மாமியாரும், இராஜேஸ்வரன் - ரோகினி (லண்டன்), வாசுகி - இரத்தினசேகர் (லண்டன்), சுதாகரன் (லண்டன்), மைதிலி (கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவி), மேனகா, கிருபாகரன் (லண்டன்), சிவாகரன் ஜெயாகரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சசிகலா, கருணாகரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் நர்த்தனா, தாமிரா, பிரியங்கன், கிருஷ்ணவி ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

ஈமக்கிரியை இன்று (6-10-95) காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. செகராஜசிங்கம்
(மருமகன்)

கேணியடி,
கொக்குவில் மேற்கு. [சி/2102]

## கடையிற்சுவாமி குருபூசை

யாழ்ப்பாணம், ஒக். 6

கடையிற்சுவாமிகள் சமாதி யடைந்த 104ஆவது குருபூசையும் — அன்னதானமும் — நாளை சனிக்கிழமை காலை 10மணி முதல் ஸ்ரீவாலாம்பிகா சமேதா வைத்திய நாதன் தேவஸ்தானத்தில் நடைபெறும். (இ-4)

## தாதி பயிலுநர் போட்டி பரீட்சை வர்த்தமானி

யாழ்ப்பாணம், ஒக். 6

சுகாதாரத் திணைக்களத்தில் தாதிகள் பயிலுநர்களை சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விவரங்கள் வெளியாகிய 07 - 09 - 1995 வர்த்தமானி அறிவித்தலின் பிரதியை இன்று முதல் அலுவலக நேரங்களில் யாழ் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கையிலுள்ள ''உதயன்'' விளம்பரப் பணிமனையிலும் பார்வையிடலாம். (இ-4)

## கலந்துரையாடல்

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கும், நல்லூர் பிரதேச சபைக்கும் உட்பட்ட சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களினதும், தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு அவைகளினதும் பிரதிநிதிகளுக்கான விசேட கலந்துரையாடல் இன்று வெள்ளி மாலை 4-15 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவை செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர். [ஐ]

★ ★ ★

நடமாடும் அவசரகால முதலுதவிச் சிகிச்சைப் பிரிவுக்கு பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதலுதவித் தொண்டர்களுக்கும், பிரதேச இணைப்பாளர்களுக்குமான கலந்துரையாடல், யாழ். மத்திய கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் போர்க்கால முதலுதவிப் பயிற்சி நிர்வாகக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

## 38 வாக்குகளால் நிறைவேறியது

கொழும்பு, ஒக்.6

அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் 88 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியுள்ளது.

### 3மீனவர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவுக்கடி கடற்பரப்பில் பிரவேசித்த கடற்படையினர் 3 மீனவர்களையும் பிடித்து சென்றனர்.

55வயதான வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை 27 வயதான நடராஜா உருத்திரமூர்த்தி 19 வயதான வைத்திலிங்கம் குகேந்திரன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். [இ-4]

### இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்தத் தாக்குதலில் ஏராளமான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதாகவும், ஒரு லட்சத்துக்கு மேலான மக்கள் வீடிழந்து காடுகளில் [illegible] குறிப்பிட்டிருந்தார். (இ-4)

## சமூக அபிவிருத்தி மன்றம் அறிவித்தல்

சமூக அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்படும் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசர் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை [07 - 10 - 95] சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்/சமூக அபிவிருத்தி மன்றக் காரியாலயத்தில் அமைதியான முறையில் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இவ் நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு பணிப்பாளர்கள், பணியாளர்கள், கழக அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்று தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— நிர்வாக செயலாளர்

257/2, 1-வது மாடி,
அர்ச்சுனா வீதி, [ஸ்ரான்லி வீதி]
யாழ்ப்பாணம். [38880]

## வீரச்சாவு

வீரவேங்கை
### நீலவண்ணன் - கேசவன்
(சிவபாக்கியநாதன் — பாபு)
(மதவடி ஒழுங்கை - வடலியடைப்பு)

03 - 10 - 1995 இல் வலி. கிழக்கில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரவேங்கை சிவபாக்கியநாதன் பாபு வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவர் சிவபாக்கியநாதன் இராசமணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், பிரதீபா (யாழ். பல்கலைக்கழகம்], பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தம்பியும், கப்பையா, கைலாயத்தினதும், காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னத்தம்பியினதும் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் வித்துடல் 04 - 10 - 95 அன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகோதரர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. பிரபாகரன்
[சகோதரன்]

தற்போதைய முகவரி
தேவிகா ஆட் எக்ஸ்பிறசஸ்,
18, கைலாசப்பிள்ளையார் கோவில் பின் வீதி,
நல்லூர். [38864]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி அப்புத்துரை

கோணாந்தோட்டம் காலஞ்சென்ற முத்துக்குமாரு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் 29, பஜார் லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசித்து வருமாகிய திருமதி அ. மனோன்மணி 3. 10 1995 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் அப்புத்துரையின் அன்பு மனைவியும் ஆன்மதேவன், பிறேமாவதி, சகாதேவன், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ஆன்மதேவன், சிவராஜா, குலதிலகம், நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பாலசிங்கம், மகாலட்சுமி, காலஞ்சென்ற பூமணி, புனிதவதி ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
வே. மகாலட்சுமி

(38878)

## திருமதி பாலாமணி தெய்வேந்திரம்

யாழ். ஆரியகுளத்தை பிறப்பிடமாகவும், 109/1, சிவன் புதுவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலாமணி தெய்வேந்திரம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா அவர்களின் மகளும், தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், ராதா, றோசா, வனிதா, சுகிர்தா [ஜேர்மனி] ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வஞானம், அலெக்சாண்டர், சந்திரகுமார், முகுசீன்] ஆகியோரின் மாமியாரும், திரவியம், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, சின்னமணி, பாக்கியம், தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [6-10-95] நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமக்கள்

(38882)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org